1971 ஜூலை 13]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the answer placed on the Table of the House, we find that a medical college is to be started in Salem disrict out of the cess fund and orders have been issued to the respective Collector by June 1970 and they are awaiting the proposal. At what stage is it now?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை மக்களிடமிருந்து வந்ததுண்டு. அது பரிசிலனையில் இருந்ததும் உண்டு. மாவட்ட வளர்ச்சிக் குழுவினர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தும் சூழ்நிலை இல்லை. ஆகவே, அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறுத்திவிடுவதா அல்லது தொடங்குவதா என்பதுபற்றித் திட்டவட்டமான முடிவை எடுத்தபிறகுதான் அறிவிக்க வேண்டும். பிறகு தான் இல்லை என்றால் வேறு வழியில் செலவழிப்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். மாவட்ட வளர்ச்சிக் குழு மருத்துவக் கல்லூரிக்குப் பயன்படுத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, செஸ் நிதியைப்பற்றி அமைச்சரவர்கள் அறிவித்தபொழுது ஒரு மாவட்டத்திற்கு 1 கோடி ரூபாய் என்ற அளவிலும் ஒரு மாவட்டத்திற்கு ஒன்றுமே இல்லாமலும் இருக்கிறது. எந்த அடிப்படையில் செஸ் நிதி பிரித்துக் கொடுக்கப்படுகிறது? செஸ் நிதியை பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஏன் அதிகமாகப் பிரித்துக் கொடுக்கக்கூடாது என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ரயில் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பு மாவட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டுகளே எந்தெந்தப் பகுதிகளிலே அது இரயில் பாதைகளை இயக்கினவோ, அதற்கு நஷ்ட ஈடு தரும் வகையில் இந்த செஸ் நிதி என்று வந்திருக்கிறது. அது சில மாவட்டங்களுக்கு அதிகமாகவும், வேறு சில மாவட்டங்களுக்குக் குறைவாகவும் இருக்கிறது என்றால் சில மாவட்டங்களில் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் அந்த இரயில்வே தொடர் நிலையத்தை நடத்தவில்லை. ஆகவே அவர்களுக்குச் செஸ் நிதி கிடைக்கவில்லை. இழப்புத் தொகையாகத்தான் செஸ் நிதி வைக்கப்பட்டு அதன்மூலம் வரும் வட்டியும் சேர்த்துக் கணக்கிடப்பட்டு வருகிறது. அண்மையில் ஊராட்சி ஒன்றியங்கள் பணத்தைச் செலவழிக்கலாம் என்று 1970-லே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜமீன் எஸ்டேட்களுக்கான இழப்பீட்டுத் தொகை.

** 185. வினா—திரு. கே. ஏ. வகாப் :* மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஜமீன்தார்களுக்கு தமிழ் நாடு அரசினால் இழப்புத் தொகை தற்போது தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு 1948-ஆம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1948) கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட ஜமீன் எஸ்டேட்டுகளுக்கான இழப்பீட்டுத் தொகைகள் முன்னரே முடிவு செய்யப்பட்டு விட்டன. ஆந்திர மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட பதினொன்கு பகுதி ஜமீன் எஸ்டேட்டுகள் தவிர பிற எஸ்டேட்டுகள் அனைத்திற்கும் இழப்பீட்டுத்தொகை எஸ்டேட்டு, ஒழிப்பு நடுவர் மன்றத்திடம் கையடை செய்யப்பட்டுள்ளது. சில நேர்வு

களில், "நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இனங்கள்" குறித்து முடிவு செய்யப்பட்டதன் விளைவாக, இழப்பீட்டுத் தொகை, திருத்தியமைக்கப்படுவதன், கூடுதலாக இழப்பீட்டுத் தொகை ஏதேனும் கொடுக்க வேண்டியிருப்பின் அக்கூடுதல் தொகை எஸ்டேட்டுகள் ஒழிப்பு நடுவர் மன்றத்திடம் கையடை செய்யப்படுகிறது.

1959-ஆம் ஆண்டு எல்லைகள் மாற்றச் சட்டத்தினையொட்டி (மத்தியச் சட்டம் 56/59) ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட்ட 14 பகுதி ஜமீன் எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரையில், ஆந்திர மாநில அரசிடமிருந்து சில தகவல் வரவேண்டியிருப்பதனால் மேற்படி எஸடேட்டுகளுக்குக் கொடுக்கப்படும் இறுதி இழப்பீட்டுத் தொகை இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது. எனினும், இப்பகுதிகளுக்கும் தனிப்பட்ட அடிப்படையில் இடைக்காலத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த அடிப்படையில் ஜமீன்தார்களுக்கு அளிக்கப்படும் தொகை மட்டும் எவ்வளவாக இருக்கிறது. மத்திய அரசு ராஜமான்யத்தை ஒழிக்க முயற்சித்ததைப்போல் தம்முடையமாநில அரசும் ஜமீன்தார்களுக்குக் கொடுக்கப்படும் இழப்புத்தொகையை நிறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஜமீன் எஸ்டேட்டுகளுக்கு இதுவரை கையடை செய்த தொகையின் மொத்த அளவு 3 கோடியே 62 இலட்சத்து 69,388 ரூபாய் 60 பைசாவாகும். மேற்கொண்டு ராஜமான்யம் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு பணம் கொடுக்கப்பட்டது. இன்னும் கொஞ்சம் செலுத்த வேண்டும், அவ்வளவுதான்.

Madras Airport

* 218 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the assistance given by the State Government for the improvements and modifications of the Madras Airport?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: சென்னை விமான தளத்தை மேம்படுத்துவதற்காக, மீனம்பாக்கத்திலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் சில நிலங்களை மாற்றுவதற்கும் கையகப்படுத்துவதற்கும் மாநில அரசை மத்திய அரசு வேண்டியுள்ளது. தேவைப்படுகிற நிலங்களை நாளடைவில் மாநில அரசு மத்திய அரசின் வசம் ஒப்படைக்கும். இப் பணிக்காக வேறு எந்த உதவியும் மாநில அரசிடம் மத்திய அரசால் கேட்கப்படவில்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் பேறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்க இந்த அரசு நடுவர் அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மீனம்பாக்கம் ஏர் போர்ட்டானது சர்வதேச ஏர்போர்ட்டில் ஒன்றாக மாறிவரும் நேரத்தில் அதை விரிவுபடுத்த எவ்வளவு ஏக்கரா நிலம் வேண்டுமென்று மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறது? அப்படியானால் எந்த அளவிற்குக் கொடுக்க தமிழக அரசு தயாராக இருக்கிறது?